# Edited Book

**on**

**“Intellectual Discourse on Proposed Reformation of the Muslim Marriage and Divorce Act (MMDA)”**

**“முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட உத்தேச மறுசீரமைப்பு தொடர்பான புலமைசார் செயலமர்வு”**

Faculty of Islamic Studies and Arabic Language
South Eastern University of Sri Lanka, Oluvil

**Title:**

Edited Book on "Intellectual Discourse on Proposed Reformation of the Muslim Marriage and Divorce Act (MMDA)

**Compiled & Published by:**

Faculty of Islamic Studies & Arabic Language (FIA), South Eastern University of Sri Lanka (SEUSL), University Park, Oluvil #32360

ISBN : 978-955-627-024-2
Edition : First, 10th May 2024
Pages : xiv+199
Copies : 500
Price : 1500.00

Phone : +94672255127
Fax : +94672255127
www.seu.ac.lk/fia

**© Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka**

*All rights reserved. No part of this edited book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without written permission from the authors, except for the inclusion of brief quotations in a review. The material in this publication has been supplied by the authors, and only minor copy editing, if relevant, has been done by the FIA, SEUSL. The views expressed remind the responsibility of the named authors and do not necessarily reflect those of the FIA, SEUSL.*

## Editorial Committee:

Editor-in-chief:

Ash-Shiekh M.H.A. Munas

Associate Editors:

Dr. F.H.A. Shibly

Ms. MSF. Nisfa

Mr. A.C. Mohamed Nafrees

Mr. I. Saujan

Mr. M.S. Zunoomy

Editorial Board:

Prof. (Dr.) S.M.M. Mazahir

Dr. S.M.M. Nafees

Ms. M.C.S. Shathifa

Ms. M.M. Shiyana

## COMMITTEE FOR INTELLECTUAL DISCOURSE

**Chairman**

| | |
|---|---|
| Ash-Sheikh. MHA. Munas | Dean/ FIA |

**Secretary**

| | |
|---|---|
| Ms. MSF. Nisfa | Lecturer(Prob)/ Dept. of. Islamic Studies |

**Members:**

| | |
|---|---|
| Mrs. MCS. Shathifa | HOD/ Department of Arabic Language |
| Dr. AH. Rifas | Lecturer (Prob)/ Dept.of. Islamic Studies |
| Mr. MT. Habeebullah | Senior Lecturer/ Dept.of. Arabic Language |
| Ms. M.M. Shiyana | Lecturer (Prob)/ Dept.of. Islamic Studies |
| Mr. I. Saujan | Temp. Assist. Lecturer/Dept.of. Islamic Studies |
| Mr. M.S. Zunoomy | Temp. Assist.Lecturer/Dept.of. Arabic Language |
| Mr. AMM. Aaqil | Temp. Assist.Lecturer/Dept.of. Arabic Language |
| Ms. ALF. Zameetha | Temp. Assist. Lecturer/ Dept.of. Islamic Studies |
| Mr. AMM. Harsook | Temp. Assist.Lecturer/Dept.of. Arabic Language |

## COMMITTEE FOR INTERLLECTUAL SURVEY

### Chairman

| | |
|---|---|
| Ash-Sheikh. M.H.A. Munas | Dean/ FIA |

### Presenter

| | |
|---|---|
| Dr. F.H.A. Shibly | Senior Lecturer/Dept. of. Arabic Language |

### Members:

| | |
|---|---|
| Ms. MSF. Nisfa | Lecturer (Prob)/ Dept. of. Islamic Studies |
| Ms. M.M. Shiyana | Lecturer (Prob)/ Dept.of. Islamic Studies |
| Mr. I. Saujan | Temp. Assist. Lecturer/ Dept.of. Islamic Studies |
| Mr. M.S. Zunoomy | Temp. Assist. Lecturer/ Dept.of. Arabic Language |
| Mr. AMM. Aaqil | Temp. Assist. Lecturer/ Dept.of. Arabic Language |
| Mr. MMA. Abdullah | Temp. Assist. Lecturer/ Dept.of. Islamic Studies |
| Ms. ALF. Zameetha | Temp. Assist. Lecturer/ Dept.of. Islamic Studies |
| Mr. AMM. Harsook | Temp. Assist. Lecturer/ Dept.of. Arabic Language |
| Mr. SA. Ahamed Sajith | Temp. Assist. Lecturer/ Dept.of. Islamic Studies |
| Mr. MFM. Fahir | Temp. Assist. Lecturer/ Dept.of. Arabic Language |
| Mrs. A.H. Sahna Sreen | Temp. Assist. Lecturer/ Dept.of. Arabic Language |
| Mr. MT. Ubaidullah | Temp. Assist. Lecturer/ Dept.of. Arabic Language |

# வாழ்த்துரை

பல்லின மக்கள் வாழும் இலங்கை நாட்டில் மக்களின் விவாகாரங்களைக் கையாழ்வதற்காக அனைவருக்கும் பொதுவான அடிப்படையில் பொதுச் சட்ட ஏற்பாடுகளும், தனிப்பட்ட ஒவ்வொரு சமூகத்திற்கும் என பிரத்தியேகமான தனியார் சட்ட ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. அந்தவகையில் சமூகத்தின் நம்பிக்கை, கலாசாரம், வழக்காறு, பாரம்பரியம் போன்றவற்றைக் கவனத்திற் கொண்டு கண்டியச் சிங்களவர்களுக்கு கண்டியச் சட்டமும், யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு தேசவழைமைச் சட்டமும், இலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்புடையதான முஸ்லிம் தனியார் சட்டமும் காணப்படுகின்றன. பொதுவாக உலக நாடுகளில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் காலத்திற்குக் காலம் சட்ட மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு, புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதும், நடைமுறையில் உள்ள சட்டங்கள் நீக்கப்படுவதும் இயல்பான ஒரு விடயமாகும். இவ்வாறான ஒரு சட்டத் திருத்ததிற்கான முயற்சியே 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் மிக நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் தொடர்பில் சில மாற்றங்களைச் செய்வதற்கான முயற்சி அரசு தரப்பில் முன்னெடுக்கப்படுகின்ற போது அச் சட்ட மாற்றத்திற்கு சார்பாக நடைமுறைப் பிரச்சினைகளை முன்னுரிமைப்படுத்தி நியாயமான கோரிக்கையின் அடிப்படையில் சட்டமாற்றத்தை வேண்டி நிற்கும் ஒரு தரப்பினரும், குறித்த சட்டமாற்றம் இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்திற்கு முரனாகாத வகையிலும், இலங்கை முஸ்லிம்களின் காலாகாலமாக ஆளப்பட்டுவந்த வழக்காறுகள் புறக்கணிக்கப்படாமலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனக்கோரும் மற்றுமொரு அமைப்பும் என இலங்கை முஸ்லிம் சமூகம் கருத்தியல் சார்ந்து இரு பிரிவுகளாக பிரிந்து காணப்படுகின்றது. இதனாலயே 2009ஆம் ஆண்டு இரு வேறுபட்ட சட்ட மாற்ற அறிக்கைகள் அரசுக்கு தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டமையை அவதானிக்க முடியும்.

இவ்விரு குழுக்களையும் ஒன்றிணைத்து இணக்கப்பாட்டுடனான ஒரு சட்டமாற்றம் மேற்கொள்ளப்படல் வேண்டும் என பல அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் முயற்சித்துவந்த போதிலும் எந்த முயற்சியும் கைகூடாத நிலையில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழிப் பீடம் பல்கலைக்கழக மட்டத்தில் பீடாதிபதி அஷ்ஷெய்ஹ் எம்.எச்.ஏ. முனாஸ் அவர்களின் தலைமையில் அதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டுள்ளது. குறித்த பீடமானது 02.03.2024ஆம் திகதி நாட்டின் முக்கிய பேராசிரியர்கள், சட்ட அறிஞர்கள், கலாநிதிகள், ஆய்வாளர்கள், சட்டத்துறை மாணவர்கள், ஆலிம்கள், காழிமார்கள், சமூக ஆய்வாளர்கள், பொதுமக்கள் என பல தரப்பினரையும் ஒன்றினைத்து “முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான புலமைசார் செயலமர்வு” என்ற தலைப்பில் ஏற்பாடு செய்திருந்தது. இதில் பெண்களின் திருமண வயதெல்லை, வலியின் தேவைப்பாடு, வலியின் ஒப்புதல், திருமணத்திற்கான பெண்ணின் சம்மதம், காழிகளின் தகைமை, பெண்காழிகளின்

நியமனம், திருமணப் பதிவு, தாபரிப்பு மற்றும் பலதார மணம் போன்ற பல முக்கிய தலைப்புகளில் கலந்துரையாடப்பட்டது தெளிவுகள் பெறப்பட்டன.

குறித்த புலமைசார்ந்த செயலமர்வின் ஒரு பகுதியாக வளவாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைத் தொகுப்புவடிவில் வெளியிடுவதற்கான முயற்சியை குறித்த பீடம் முன்னெடுத்து வருகின்றமை பாராட்டத்தக்க ஒரு விடயமாகும். உண்மையில் ஒரு பீடம் சமூகம் சார்ந்து ஆற்றவேண்டிய பங்களிப்புகளில் பட்டியலிட்டு முன்னுதாரனமாகக் கொள்ள வேண்டிய ஒரு சிறந்த முயற்சியாக நான் இதனைக் காண்கிறேன். மேலும், இலங்கையில் இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தை பொதுச் சட்டத்துடன் இணைத்துக் கற்பிக்கும் ஒரே பீடமாக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழிப் பீடம் காணப்படுவதனால் இவ்வாறான அறிவார்ந்த முயற்சிகள் குறித்த பீடத்தினாலயே மேற்கொள்ளப்பட வேண்டிய கடப்பாடு உள்ளமையையும் இங்கு நோக்கத்தக்கது.

இவ்வாறான முயற்சிகளை எதிர்காலத்திலும் குறித்த பீடம் முன்னெடுக்க வேண்டும் என வேண்டிக் கொண்டு இச்சமூகம்சார்ந்த முயற்சியில் என்னையும் ஒரு பங்குதாரனாக இணைத்துக் கொண்டமைக்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றிகூறி, இவ்வாறான முயற்சியை இறைவன் பொறுந்திக் கொள்வானாக. இவ்வாய்ப்பினை வழங்கிய பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ் அவர்களுக்கு நன்றியையும், வாழ்த்துக்களையும் கூறியவனாக என்னுடைய சிறு வாழ்த்துரையை முடித்துக் கொள்கிறேன்.

நன்றி

**பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்**
உபவேந்தர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்.

# முகவுரை

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபுமொழி பீடத்தினால் கடந்த 02.03.2024 திகதியன்று ஒழுங்கு செய்யப்பட்ட முஸ்லிம் விவாக விவாகரத்து உத்தேச மறுசீரமைப்பு தொடர்பான புலமைசார் செயலமர்வில் சமர்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூலாக (Extended Chapters Book) ஆக வெளியிடுவதற்கு கிடைத்தமையினை இட்டு மகிழ்சியடைகின்றேன். சுமார் 14 வளவாளர்களின் ஆக்கங்களை இது கொண்டுள்ளது. குறித்த ஆக்கங்களின் உள்ளடக்கத்திற்கு வளவாளர்களே பொறுப்புதாரிகளாவர். அன்றைய தினம் கலந்துகொண்டவர்களின் வேண்டுகோளிற்கினங்க இச் செயலமர்வு ஆவணப்படுத்தும் முயற்ச்சியாகவே இது பார்க்கப்படுகின்றது. இதனூடாக துறைசார்ந்த அறிஞர்களின் வகிபாகம் இத்துறையில் மீள வலியுருத்தப்படுவதோடு ஆக்கபூர்வமான மேலும் பல கலந்துரையாடல்களுக்கு இவ் ஆவணப்படுத்தல் வழிவகுக்கும் என நம்புகின்றேன்.

இன்று முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்ட திருத்தத்தில் பேசுபொருளாக இருக்கின்ற பெண்ணின் சம்மதம், திருமண வயதெல்லை, திருமணப் பதிவு, வலியின் தேவை, குழந்தை பராமரிப்பு, காழியின் தகுதி, காழி நீதிமன்றத்தின் செயற்பாடு போன்ற விடயங்களை விரிவாக இவ் ஆவணம் கையாழுகின்றது. அது மட்டுமன்றி இச் செயலமர்வுக்கு முன்னோடியாக எமது பீடத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வு (Survey) ஆய்வறிக்கையை இந்த ஆவணம் உள்ளடக்கியிருப்பது மிக முக்கியமாக நோக்கப்படுகின்றது.

பல சிரமங்களுக்கு மத்தியில் இப்பெறுமதியான செயலமர்வை நடாத்துவதற்கு பலவகையிலும் பங்களிப்புச் செய்த எமது பீடத்தின் கல்விசார், கல்விசாரா ஊழியர்கள், துறைத்தலைவர்களின் அயராத முயற்சியினை இங்கு நினைவு கூர்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். குறிப்பாக, இச் செயலமர்வை ஒழுங்கு செய்வதற்கு அனுமதி வழங்கிய இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் அவர்களுக்கு எமது பீடத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தூர இடங்களிலிருந்து வளவாளர்களாக வருகைதந்து தங்களது கட்டுரைகளை இச் செயலமர்வில் சமர்பித்தது மட்டுமன்றி இதனை ஆவணப்படுத்துவதற்கும்

தங்களது மேலான ஒத்துழைப்பை வழங்கியதற்காக அனைவருக்கும் பீடம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக, தொகுப்பு நூலாக (Extended Chapters Book) ஆக வருவதற்கு துணையாக நின்ற புலமைசார் செயலமர்வின் ஏற்பாட்டுக் குழுவிற்குக்கும், ஆவணப்படுத்தல் குழுவினருக்கும் அல்லாஹ்வின் அருள் என்றென்றும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றேன். இக்கன்னி முயற்ச்சியில் காணக் கிடைக்கின்ற இடர்பாடுகளை பெருமங் கொண்டு மண்ணிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். இதன் அடுத்த கட்ட பயணம் மேலும் தொடரவேண்டும் என்று இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**அஷ்-ஷெய்ஹ் எம்.எச்.ஏ. முனாஸ்**
தலைவர்
ஆவணப்படுத்தல் குழு
முஸ்லிம் விவாக விவாகரத்து தொடர்பான புலமைசார் செயலமர்வு